[2020 ஜனவரி 9

(ஓ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2020), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

பிற்பகல் 2-40

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்களையும் நீக்கறவு செய்வதற்கான சட்டமுன்வடிவை,மாநிலசட்ட ஆணையத்தின்பரிந்துரையின்பேரில் இங்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்காக தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களை நான் படித்துப் பார்த்தேன். இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன். காரணம், அவற்றைப் படித்துப் பார்த்தபோது, அதிகார வரம்பு எதனையும் மீட்டெடுத்தல், அலுவலகம், பழக்கவழக்கம், பொறுப்பு, உரிமை, உரிமைமூலம், சலுகை, தடை, விலக்கு, பயன்படுத்துதல், செய்தொழில், நடைமுறை ஆகிய எதுவுமே இந்தச் சட்டத்தால் பாதிப்பிற்குள்ளாகாது என்று இந்த சட்டமுன்வடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படி எதுவுமே பாதிப்பிற்குள்ளாகாது என்று சொல்லப்படும்போது, இந்த நீக்கறவு சட்டத்தைக் கொண்டுவருவதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது என நான் கேட்க விரும்புகிறேன். மேலும், மத்திய அரசு சமீபத்தில் பல்வேறு திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது.

@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அப்படி மத்திய அரசால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற திருத்தச் சட்டங்களில் ஏதேனும் இதில் இடம் பெற்றிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனவே, இந்தச் சட்டமுன்வடிவினை செயல்வடிவமாக்குவதற்கு விழைகின்ற இந்த முடிவை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்த்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில், ஆங்கிலேயர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட சட்டங்கள், தற்போது வழக்கத்தில் இல்லாத சட்டங்கள், காலாவதியான சட்டங்கள் உள்பட இப்படி பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. சில சட்டங்கள் இப்போதும் இருக்கின்றன. அந்தச் சட்டங்களில் பல்வேறு உட்பிரிவுகளை உள்ளடக்கி பல்வேறு புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு புதியதாக சட்டங்கள் உருவாக்கப்பட்டுவிட்டதால் தேவையற்ற பிரிவுகளை நீக்குவதும், ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களை அலசி, ஆராய்ந்து இன்றைக்கு இருக்கக்கூடிய கால சூழ்நிலைக்கேற்ப அந்தச் சட்டங்களைப் பயன்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதை ஆராய்ந்தும், அது பயனற்றிருந்தால் அதை நீக்குவதற்கு அரசுக்கு அறிக்கை அளிப்பதும்தான் மாநில சட்ட ஆணையத்தினுடைய பணிகளாகும். ஆராய்வது என்றால் தன்னிச்சையாக ஆராய்வது இல்லை. அனைத்துத் துறை சார்ந்த சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, தீர விசாரித்து, ஆராய்ந்து மாநில சட்ட ஆணையம் அரசிற்கு பரிந்துரை செய்யும். அதை ஏற்று, தேவையற்ற, காலாவதியான சட்டங்களை நீக்குவதற்குத்தான் அரசு இந்தச் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், Tamil Nadu General Sales Tax Act, VAT Act 2006 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டவுடன் அது காலாவதியாகிவிட்டது. ஆனால், அந்தச் சட்டம் இன்றைக்கும் இருக்கிறது. Tamil Nadu General Sales Tax Act இன்றைக்கும் இருக்கிறது. 2006 ஆம் ஆண்டு VAT Act கொண்டுவரப்பட்டவுடன் Tamil Nadu General Sales Tax Act காலாவதியாகிவிட்டது. ஆனால், அந்தச் சட்டம் இன்றைக்கும் இருக்கிறது. அந்தச் சட்டத்தை நீக்க வேண்டுமா? இல்லையா?

[திரு. சி.வி. சண்முகம்] [2020 ஜனவரி 9

காலாவதியான சட்டத்தை வைத்துக்கொண்டு தற்போது என்ன செய்வது? 1878 ஆம் ஆண்டு தமிழ்நாடு காப்பிக் கொட்டை திருட்டுத் தடுப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் குறித்து சட்டமுன்வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தை மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் சொன்னார்கள். அது, 1878-ல் இயற்றப்பட்ட சட்டம். இன்றுவரை அது இருக்கிறது. அது நீக்கப்படவில்லை. இப்படி தேவையற்ற, இன்றைய சூழ்நிலைக்கு தேவையற்ற சட்டங்களை நீக்குவதுதான் இதனுடைய பணியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 12 நோக்கங்களைச் சுட்டிக்காட்டி அந்த நோக்கங்களுக்கு இந்தச் சட்டத்தால் பாதிப்பு ஏற்படாதபோது ஏன் இந்தச் சட்டமுன்வடிவினைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தவறாகப் புரிந்துகொண்டுள்ளாரா என்பது எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு முறை அதை படித்துக் காட்டுகிறேன். மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்களை நீக்குகின்றபோது, ஏற்கெனவே இருந்த அந்தச் சட்டத்தின்மூலம் பெறப்பட்ட நன்மைகள், அந்தச் சட்டங்களின் வாயிலாக பெறப்பட்ட உரிமைகள், அதன்மூலம் பெறப்பட்ட அனைத்து சலுகைகள் எதையும் பாதிக்காது. மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்கள் நீக்கப்படுவதால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒருமுறை நான் படித்துக் காட்டுகிறேன்.

பிற்பகல் 2-45

"This Act shall not affect the validity, invalidity, effect or consequences of anything already done or suffered, or any right, title, obligation or liability already acquired, accrued or incurred, or any remedy or proceeding in respect thereof, or any release or discharge of or from any debt, penalty, obligation, liability, claim or demand, or any indemnity already granted, or the proof of any past act or thing" ஏற்கெனவே, இந்தச் சட்டத்தின் மூலமாகப் பெறப்பட்ட அனைத்து உரிமைகளும், இந்தச் சட்டத்தினை நீக்குவதால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்றுதான் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே, இன்றைய காலகட்டத்திற்கு தேவையற்ற காலாவதியான சட்டங்களை நீக்குவதற்காகத்தான் சட்ட ஆணையத்தினுடைய

2020 ஜனவரி 9] [திரு. சி.வி. சண்முகம்]

பரிந்துரை இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சட்ட ஆணையம், இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலிருந்து ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. நாகமுத்து அவர்கள் தலைமையில் இயங்கி, அவர் பொறுப்பேற்ற இந்த இரண்டரை ஆண்டுகாலத்தில் மட்டும், இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற 152 சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு பரிந்துரை செய்திருக்கின்றார். ஏற்கெனவே, எல்லாம் சேர்த்து மொத்தம் 440 தேவையற்ற காலாவதியான சட்டங்களை நீக்குவதற்கு இதுவரையிலும் சட்ட ஆணையம் சிறப்பாக நல்ல முறையில் செயல்பட்டிருக்கின்றது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,